**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்**

**தேதி 07.01.2026** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா-இஸ்ரேல் கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்துவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, இஸ்ரேலிய பிரதமருடன் தொலைபேசியில் உரையாடினார்.

நாட்டில், **தனியார் பங்கேற்புடன் கூடிய, அமைப்பு ரீதியிலான கட்டமைப்பு** மூலம் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை ஊக்குவிக்க, மத்திய அரசு, **3 ஆண்டு முன்முயற்சி ஒன்றை** அறிவித்துள்ளது.

மத்திய அரசுத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 50 ஆயிரத்திற்கும் மேறபட்ட மருத்துவமனைகள், **தேசிய தர உறுதிப்பாட்டு சான்றிதழ்** பெற்றுள்ளன.

புதுச்சேரியில், மக்களின் தேவையை அறிந்து, எந்த அளவிற்கு பொங்கல் ஊக்கத் தொகை வழங்க முடியுமோ, அந்த அளவிற்கு வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

---------------------------

மோடி இஸ்ரேல் (11)

புதிய ஆண்டில், இந்தியா-இஸ்ரேல் கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, இஸ்ரேலிய பிரதமர் திரு. பெஞ்சமின் நெட்டன்யாகுவுடன், தொலைபேசியில் உரையாடினார். இஸ்ரேலிய பிரதமரின் இந்த தொலைபேசி அழைப்பின் போது, பொதுவான ஜனநாயக மாண்புகள், முன்னோக்கிய பார்வை, மற்றும், ஆழமான பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான முன்னுரிமை அம்சங்கள் இனம் காணப்பட்டன. தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ளாமல், தீவிரவாதத்தின் அனைத்து வடிவங்களையும், கடுமையாக எதிர்க்கும் அணுகுமுறையை, இருதலைவர்களும் மீண்டும் வலியுறுத்தினர்.

---------------------------

மோடி-கப்பல் (6)

கடலோரக் காவல் படையின் **சமுத்திர பிரதாப்** கப்பல், அண்மையில் பயன்பாட்டிற்கு வந்து இருப்பதை, பிரதமர் திரு. நரேநதிர மோடி பாராட்டியுள்ளார். இந்தியாவின் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்தும் இக்கப்பல், நாட்டின் சுயசார்பு நோக்கத்தை ஊக்குவித்து, நீடித்தத் தன்மையில் நமக்குள்ள உறுதிப்பாட்டை, வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்து இருப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார்.

----------------------------

சோம்நாத்-மோடி 1 (5)

வரலாற்று காலத்தில் மீண்டும் - மீண்டும் மொகலாயர் தாக்குதலுக்கு ஆளான குஜராத் மாநிலம் சோம்நாத் கோவில், முதல் முறை தாக்கப்பட்டதன் ஆயிரமாவது ஆண்டாக, நடப்பு 2026ஆம் ஆண்டு அமைவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் ஞாயிற்றுக் கிழமை சோம்நாத் செல்ல இருக்கிறார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்….

சோம்நாத்-மோடி 2 (13)

**சோம்நாத் கௌரவ திருவிழாவை** குறிக்கும் வகையில், சோம்நாத்தில், ஓராண்டு காலம் பல்வேறு செயல்பாடுகளுக்கு திட்டமிடப் பட்டுள்ளது. நாளை முதல், 11ஆம் தேதி வரை நடைபெற உள்ள ஆன்மீக மற்றும், சமுதாய செயல்பாடுகளும் இதில் அடங்கும். சோமநாதர் ஆலயம், 1951ஆம் ஆண்டு, சர்தார் பட்டேல் தலைமையில் புனரமைக்கப்பட்டு, நடப்பு 2026ஆம் ஆண்டுடன், 75 ஆண்டுகள் நிறைவடைவதும் குறிப்பிடத்தக்கது.

சோமநாதர் ஆலயம், எதிரிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள், மற்றும், காலனி ஆட்சியாளர்களின் கொள்ளைகளையும் மீறி, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தலை நிமிர்ந்து நிற்பது, எவராலும் வெல்ல முடியாத இந்திய நாகரீக உணர்வின் பிரதிபலிப்பு என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். சோமநாதர் ஆலயத்தை போலவே, நாடும், இழந்த பெருமையை மீட்டெடுக்க முடியும் என்று, பிரதமர் தெரிவித்துள்ளார்.

----------------------------

நிதி (13)

நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை, **தனியார் பங்கேற்புடன் கூடிய, அமைப்பு ரீதியிலான கட்டமைப்பு** மூலம், சீரான முறையில் ஊக்குவிக்க, மத்திய அரசு, 3 ஆண்டுகளுக்கான அரசு-தனியார் ஒத்துழைப்பு முன்முயற்சி ஒன்றை அறிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் இடம்பெற்ற அறிவிப்பின்படி, இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. உள்கட்டமைப்புத் துறை சார்ந்த மத்திய அமைச்சகங்கள், மற்றும், பல்வேறு மாநில அரசுகளின் 852 திட்ட உத்தேசங்கள், இதில் சேர்க்கப்

பட்டுள்ளன. மொத்தம் 17 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டங்கள் குறித்து, முதலீட்டாளர்கள், மற்றும், சம்பந்தப்பட்ட இதர தரப்பினர் முன்கூட்டியே தெரிந்து கொள்வதால், முறையான தகவல்களின் அடிப்படையில், முதலீட்டு முடிவுகளை இவர்கள் மேற்கொள்ள உதவிகரமாக இருக்கும் என மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

----------------------------

*ஜவுளி* (10)

மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களின் ஜவுளி அமைச்சர்களுக்கு இடையிலான தேசிய மாநாடு, அசாம் மாநிலம் குவஹாத்தியில், நாளை தொடங்க உள்ளது. இந்த 2 நாள் மாநாட்டில், ஜவுளித் துறைகான கொள்கை, முதலீடு, ஏற்றுமதி, உள்கட்டமைப்பு, மற்றும், தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து விவாதங்கள் இடம்பெற உள்ளன. வேலை வாய்ப்பு, உள்கட்டமைப்பு வளர்ச்சி, மற்றும், ஏற்றுமதி மேம்பாட்டை கருத்தில் கொண்டு, 2030ஆம் ஆண்டிற்குள் உலகின் முக்கிய **ஜவுளி உற்பத்திக் கேந்திரமாக** மேம்படுத்தும் நோக்கத்திற்கு ஏற்ப, **வளர்ச்சி, பாரம்பரியம், மற்றும், புதுமையின் ஒருங்கிணைப்பு** என்ற கருபொருள் அடிப்படையில், இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

----------------------------

*சுகாதாரம்* (10)

நாட்டின் பொது சுகாதார வசதிகளில், உலகத் தரம் வாய்ந்த நடைமுறைகள் பின்பற்றப் படுவதை உறுதிப்படுத்தும் வகையில், கடந்த 2024ஆம் ஆண்டு, மத்திய அரசு கொண்டு வந்த திட்டத்தின் கீழ் இதுவரை, நாடு முழுவதும் 50 ஆயிரத்திற்கும் மேறபட்ட மருத்துவமனைகள், தேசிய தர உறுதிப்பாட்டு சான்றிதழ் பெற்றுள்ளன. ஆரம்பத்தில் மாவட்ட மருத்துவமனைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்ட இச்சான்றிதழ், பின்னர், மாவட்ட துணை மருத்துவமனைகள், சமூக சுகாதார மையங்கள், மற்றும், ஆயுஷ்மான் ஆரோக்கிய கேந்திரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு, நோயாளிகளை மையமாக கொண்ட, பாதுகாப்பான, தரமான மருத்துவ சேவைகள் வழங்கப்படுவதாக, மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

----------------------------

*ரங்கசாமி* (16)

புதுச்சேரியில், வளர்ச்சிக்கான பிரெஞ்ச் முகமை திட்டத்தின் கீழ், வில்லியனூர் பரசுராமபுரத்தில், 59.86 கோடி ரூபாய் மதிப்பில், கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் பணிகளை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு. ஆர். சிவா உள்ளிட்டோர் உடன் இருந்தனர். பின்னர் முதலமைச்சர் திரு. ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், மக்களின் தேவையை அறிந்து, எந்த அளவிற்கு பொங்கல் ஊக்கத் தொகை வழங்க முடியுமோ, அந்த அளவிற்கு வழங்கப்படும் என்றார்.

உயர்த்தப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபாய் மகளிர் உதவித் தொகை, வரும் 12ஆம் தேதி, அல்லது, பொங்கலுக்கு பிறகு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். போலி மருந்து விவகாரத்தில், எதிர்கட்சிகளின் கோரிக்கைப்படி, சிபிஐ விசாரணைக்கு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளதாகவும், இதுகுறித்து, வெளிப்படையான, ஒட்டுமொத்த அறிக்கை, விரைவில் வெளியிடப்படும் என்றும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்தார். தங்கள் ஆட்சி மீது எந்த குறையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

----------------------------

*பிரகதி-பர்பாத்தி 1 (12)*

முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம் குறைகளை உடனுக்குடன் களைந்து, திட்டங்கள், குறித்த நேரத்தில் நிறைவேற்றி முடிக்கப்படுவதை உறுதிப்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட, **பிரகதி** தொழில் நுட்ப வசதி, இதுவரை, 50 கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி, புதிய மைல்கல் ஒன்றை எட்டி உள்ளது. பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் பிரகதி வசதி மூலம் கண்காணித்து நிறைவேற்றப்பட்ட முக்கியத் திட்டங்களில் ஒன்றான **பர்பாத்தி நீர் மின்சாரத்** திட்டம் குறித்து, இன்று இந்த சிறப்புத் தொகுப்பில் காண்போம்…..

பிரகதி-பர்பாத்தி 2 (19)

ஹிமாச்சல பிரதேசத்தில், பெரிய அளவிலான அணை எதையும கட்டாமல், ஆற்றின் இயல்பான நீர்ப்போக்கு மூலமாகவே மின்சாரம் தயாரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட 800 மெகாவாட் **பர்பாத்தி நீர் மின்சார திட்டத்தின்** கீழ், ஆற்று நீரை மின் உற்பத்தி நிலையத்திற்கு திருப்பி விடும் வகையில், 31 கிலோ மீட்டர் நீளத்திற்கு கால்வாய் அமைக்கும் பணிகளில், இமயமலைப் பகுதியின் கடினமான நிலப்பரப்பு காரணமாக, தீவிர தாமதங்கள் ஏற்பட்டன. பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரகதி வசதி மூலமாக, திட்டப் பணிகளை மறு ஆய்வு செய்து, முன்னுரிமை அடிப்படையில் கட்டுமானத்தை நிறைவேற்ற, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதை தொடர்ந்து இப்பணிகள் துரிதமாக்கப்பட்டு, பர்பாத்தி நீர் மின் நிலையத்தின் 3 உற்பத்திப் பிரிவுகள், கடந்த ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி முதல், வர்த்தக ரீதியிலான மின் உற்பத்தியை தொடக்கின. அதற்கடுத்த 15 நாட்களில், 4ஆவது மின் உற்பத்திப் பிரிவும், செயல்படத் தொடங்கியதால், மின் உற்பத்தி நிலையம், 800 மெகாவாட் மின் உற்பத்தி திறனை முழுமையாக எட்டியது. கடினமான நிலப் பகுதிகளிலும், முறையான உயர்நிலைக் கண்காணிப்பு மூலம், சிக்கலான உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றி முடிப்பதில், இந்தியாவின் வல்லமைக்கு எடுத்துக் காட்டாக பர்பாத்தி நீர் மின்சாரத் திட்டம் திகழ்கிறது.

---------------------------

*இஸ்ரோ* (8)

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம், வரும் 12ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து, EOS-N1 புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளை, PSLV-C62 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த உள்ளது. கூடவே, இந்திய மற்றும் சர்வதேச பயனர்களின் வேறு 18 செயற்கைக் கோள்களும் விண்ணில் ஏவப்பட உள்ளன. பாதுகாப்பு ஆராய்ச்சி, மற்றும், அபிவிருத்திக் கழகத்தால் வடிவமைத்து தயாரிக்கப்பட்ட EOS-N1 செயற்கைக் கோள், பாதுகாப்பு தொடர்பான பல்வேறு தேவைகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்றும், சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------------

*வானிலை* (16)

இன்று தென்கிழக்கு வங்கக் கடல், மற்றும், நிலநடுக்கோட்டு இந்தியப் பெருங்கடலில் நிலவும், காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், அடுத்த 24 மணி நேரத்தில், ஆழந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், தென்மேற்கு வங்கக் கடல் பகுதிளை நோக்கி, ஆரம்பத்தில் மேற்கு-வடமேற்கு திசையில் நகரக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. நாளை முதல், 4 நாட்களுக்கு, பல்வேறு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வரும் 13ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக ஈரோட்டில், 33 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. சமவெளிப் பகுதிகளை பொருத்தவரை, திருத்தணியில், 18.5 டிகிரி செல்சியஸ், மற்றும், மலைப் பகுதிகளை பொருத்தவரை, கொடைக்கானலில், 7.2 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

---------------------------

*கிரிக்கெட்* (14)

2026ஆம் ஆண்டிற்கான ஆடவர் **டி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில்**, இந்தியாவில் பங்களாதேஷ் பங்கேற்க வேண்டிய போட்டிகளை, வேறு நாட்டிற்கு மாற்ற, **பங்களாதேஷ் கிரிக்கெட் கவுன்சில்** விடுத்த கோரிக்கையை, **ஐசிசி** நிராகரித்துள்ளது. வங்கதேசத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக நிகழ்ந்த வன்முறைகளை கருத்தில் கொண்டு, **இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம்**, ஐபிஎல் போட்டிகளில் இருந்து, **முஸ்தபிசுர் ரகுமானை** விடுவித்த நிலையில், **வங்கதேச கிரிக்கெட் கவுன்சில்**, பாதுகாப்பு காரணங்களை காட்டி, இந்தியாவில் இருந்து வேறு நாட்டிற்கு டி-20 போட்டிகளை மாற்ற கோரிக்கை விடுத்தது. இடமாற்றம் செய்வதற்கான, சரியான காரணங்கள்

**வங்கதேசத்திடம்** இல்லை என, மெய்நிகர் பேச்சு வார்த்தைகளின் போது **ஐசிசி** கூறியது. டி-20 உலகக் கோப்பை போட்டிகள், அடுத்த மாதம் 7ஆம் தேதி முதல், இந்தியாவிலும், இலங்கையிலும் நடைபெற உள்ளன.

---------------------------

*தேர்தல் மாநாடு (10)*

ஜனநாயகம், மற்றும், தேர்தல் மேலாண்மை குறித்த 3 நாள் **இந்திய சர்வதேச மாநாடு**, புதுடெல்லி பாரத் மண்டபத்தில், வரும் 21ஆம் தேதி தொடங்க உள்ளது. தேர்தல் ஆணையத்தின் கீழ் செயல்படும் இந்திய சர்வதேச ஜனநாயக, மற்றும், தேர்தல் நிர்வாகக் கழகம், தேர்தல் ஆதரவிற்கான சர்வதேச கழகத்துடன் இணைந்து, இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. **அனைவரையும் உள்ளடக்கிய, அமைதியான, நீடித்த உலகிற்கான ஜனநாயகம்** என்ற கருப்பொருள் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில், உலக நாடுகளின் தேர்தல் நிர்வாக அமைப்புகள் சந்திக்கும் சவால்கள் குறித்தும், இத்தகைய அமைப்புகளுக்கு இடையே, பொதுவான பார்வைகளை பகிர்ந்து கொள்வது குறித்தும், விரிவாக விவாதிக்கப்படும்.

---------------------------

*ஆரோவில் (8)*

ஆரோவில் பகுதிக்கு வருகைபுரிந்த தமிழ்நாடு, மற்றும், புதுச்சேரிக்கான பிரிட்டிஷ் துணை தூதர் **ஹலிமா ஹாலண்ட்**, இளைஞர் ஈடுபாடு, நிலைத்தன்மை மற்றும் கலாச்சார பரிமாற்றம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆரோவில் அறக்கட்டளையின் முக்கிய பணிக் குழுக்களுடன் கலந்துரையாடினார். அறக்கட்டளையின் செயலர் ஜெயந்தி ரவி, பிரிட்டீஷ் துணை தூதருடன், காணொளி காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார். கடந்த 4 ஆண்டுகளில் ஆரோவில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து அவர் எடுத்துக் கூறினார்.

---------------------------

*சரண்டர் (7)*

சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில், இன்று 13 பெண்கள் உட்பட, 26 நக்சலைட்டுகள், போலீசாரிடம் சரணடைந்துள்ளனர். இவர்களில் 13 பேரின் தலைக்கு, மொத்தம் 65 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டு இருந்தது. வன்முறையை கைவிட்டு, பிரதான நீரோட்டத்திற்கு திரும்பும் தீவிரவாதிகளுக்கான, மாநில அரசின் மறுவாழ்வுக் கொள்கையின் கீழ், இவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் உட்பட, பல்வேறு உதவிகள் வழங்கப்பட உள்ளன.

---------------------------

இந்தியா-இஸ்ரேல் கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்துவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, இஸ்ரேலிய பிரதமருடன் தொலைபேசியில் உரையாடினார்.

நாட்டில், **தனியார் பங்கேற்புடன் கூடிய, அமைப்பு ரீதியிலான கட்டமைப்பு** மூலம் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை ஊக்குவிக்க, மத்திய அரசு, **3 ஆண்டு முன்முயற்சி ஒன்றை** அறிவித்துள்ளது.

மத்திய அரசுத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 50 ஆயிரத்திற்கும் மேறபட்ட மருத்துவமனைகள், **தேசிய தர உறுதிப்பாட்டு சான்றிதழ்** பெற்றுள்ளன.

புதுச்சேரியில், மக்களின் தேவையை அறிந்து, எந்த அளவிற்கு பொங்கல் ஊக்கத் தொகை வழங்க முடியுமோ, அந்த அளவிற்கு வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**